பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
27 06 2024 6 45
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- தமிழகத்தில் சுற்றுலா மற்றும் மருத்துவ சுற்றுலாவை மேம்படுத்த புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.
- தமிழகத்தில் சுமார் 9 ஆயிரம் திருக்கோவில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படுவதாக மாநில அரசு கூறியுள்ளது.
- நாட்டில் சாதிவாரிக் கணக்கெடுப்பை உடனடியாக தொடங்க வேண்டும் என பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.
- நீலகிரி மற்றும் கோவை மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- உலகக்கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது அரை இறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ----*</u>

<<<<>>>>

தமிழகத்தில் சுற்றுலா மற்றும் மருத்துவ சுற்றுலாவை மேம்படுத்த புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று அத்துறைக்கான அமைச்சர் திரு. க. ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் தமது துறை மானியக் கோரிக்கைகளுக்கு பதிலளித்துப் பேசிய அவர், புதிய அறிவிப்புகளை வெளியிட்டார்.

தமிழகத்தில் சுற்றுலாவை மேம்படுத்த சென்னையில் பயணச் சந்தை நடத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

ஊட்டி, குன்னூர், கொடைக்கானல் உள்ளிட்ட முக்கிய சுற்றுலாத் தலங்களில் உள்ள தமிழக சுற்றுலா வளர்ச்சிக் கழக தங்கும் இடங்கள் மேம்படுத்தப்படும் என்று அவர் கூறினார்.

நீர் சாகச விளையாட்டுகளை ஊக்குவிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் திரு. க. ராமச்சந்திரன் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் சுமார் 9 ஆயிரம் திருக்கோவில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படுவதாக மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேகர்பாபு கூறியுள்ளார்.

சட்டப்பேரவையில் தமது துறை மானியக் கோரிக்கைகளுக்கு பதிலளித்துப் பேசிய அவர், பல்வேறு புதிய அறிவிப்புகளை வெளியிட்டார்.

<<<<>>>>

ராமநாதபுரம் மாவட்டம் அழகன்குளத்தில் அகழாய்வுப் பணிகளில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களைக் கொண்டு அம்மாவட்டத்தில் புதிய அருங்காட்சியகம் அமைக்கப்படும் என மாநில தொல்லியல்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு கூறியுள்ளார்.

சட்டப்பேரவையில் தமது துறை மானியக் கோரிக்கைளுக்கு பதிலளித்துப் பேசிய அவர், கல்வெட்டுகளை நூலாக வெளிக்கொணரும் சிறப்பு திட்டம் செயல்படுத்தப்படும் என்று தெரிவித்தார்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த 10 சின்னங்கள் பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக அறிவிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் வணிக வரித்துறை அலுவலகங்களின் செயல்பாடுகள் மேம்படுத்தப்படும் என அத்துறைக்கான அமைச்சர் திரு. மூர்த்தி கூறியுள்ளார்.

சட்டப்பேரவையில் தமது துறை மானியக் கோரிக்கைகளுக்கு பதிலளித்துப் பேசிய அவர், வணிக வரித்துறையில் உள்ள 7 மண்டல பயிற்சி மையங்களில் கணினி வழி பயிற்சி வழங்க உபகரணங்கள் கொள்முதல் செய்யப்படும் என்று கூறினார்.

பல்வேறு கோட்டங்களில் புதிய வணிகவரி கட்டிடங்கள் கட்டப்படும் என்றும் அவர் கூறினார்.

<<<<>>>>

நாட்டில் சாதிவாரிக் கணக்கெடுப்பை உடனடியாக தொடங்க வேண்டும் என மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் எழுதியுள்ள கடிதத்தில், சமூக முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளை நிர்ணயிக்கும் காரணியாக இந்தக் கணக்கெடுப்பு அமையும் என்று கூறியுள்ளார்.

சாதி அடிப்படையிலான சமூக பொருளாதார கணக்கெடுப்பு தரவுகள் அவசியம் என்று முதலமைச்சர் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இதன் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்புடன் ஒருங்கிணைந்த வகையில் சாதிவாரி கணக்கெடுப்பை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று திரு. மு.க. ஸ்டாலின் அந்தக் கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

நாடாளுமன்ற இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று உரையாற்றுகிறார்.

பதினெட்டாவது மக்களவையின் முதல் கூட்டத் தொடர் கடந்த திங்கள்கிழமை தொடங்கிய நிலையில் கடந்த சில நாட்களாக உறுப்பினர்கள் பதவியேற்பு மற்றும் அவைத் தலைவர் தேர்தல் நடைபெற்றது.

இந்நிலையில் மாநிலங்களவை கூட்டத் தொடர் இன்று தொடங்குகிறது.

இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத்தலைவரின் உரை இன்று இடம்பெறுகிறது.

அதைத் தொடர்ந்து, நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் கொண்டு வரப்பட்டு அதன் மீது விவாதம் நடைபெறும்.

<<<<>>>>

கள்ளக்குறிச்சி சம்பவம் தொடர்பாக தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணைய தலைவர் திரு கிஷோர் மக்வானா நேற்று நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

கள்ளச்சாராயம் அருந்தி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரிடம் அவர் விசாரணை நடத்தினார்.

இச்சம்பவத்தால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவோரையும் அவர் சந்தித்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்திலும் அவர் பங்கேற்றார்.

பாதிக்கப்பட்டோருக்கு அனைத்து உதவிகளும் கிடைக்க இந்த ஆணையம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று திரு. கிஷோர் மக்வானா தெரிவித்தார்.

<<<<>>>>

நீலகிரி மற்றும் கோவை மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் இன்று கனமழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக் கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர், தமிழகத்தின் பிற பகுதிகளில் சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகக் கூறினார்.

மீனவர்கள் அடுத்த 3 நாட்களுக்கு குறிப்பிட்ட பகுதிகளுக்கு மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என அவர் அறிவுறுத்தினார்.

(வாய்ஸ் பைட் — செந்தாமரைக் கண்ணன் — 34 செகண்ட்ஸ்)

இதனிடையே நீலகிரி மாவட்டத்தில் கனமழை காரணமாக கூடலூர் மற்றும் பந்தலூர் தாலுக்காக்களில் பள்ளிகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் அணைகளில் இருந்து நீர்த் திறப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

நேட்டோ-வின் அடுத்த பொதுச் செயலாளராக நெதர்லாந்து பிரதமர் திரு மார்க் ருட்டே நியமிக்கப்படுவதாக நேட்டோ நாடுகள் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

<<<<>>>>

நேபாளத்தில் கனமழை, வெள்ளப்பெருக்கு மற்றும் மின்னல் தாக்கிய சம்பவங்களில் நேற்று ஒரே நாளில் 14 பேர் உயிரிழந்தனர்.

<<<<>>>>

காசி விஸ்வநாதர் ஆலயத்தின் முன்னாள் தலைமை பூசாரி குல்பாதி திவாரியின் மறைவுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

இந்த ஆண்டு சர்வதேச யோகா தினத்தையொட்டி பல்வேறு அரசுத்துறை நிறுவனங்களுக்கு 8 கோடியே 67 லட்சம் ரூபாய் மதிப்பிலான யோகா ஆடைகள் மற்றும் விரிப்புகளை விற்பனை செய்துள்ளதாக காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

திருப்பத்தூர் மாவட்டம் துத்திப்பட்டு கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் 192 பயனாளிகளுக்கு 81 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திரு தர்ப்பகராஜ் வழங்கினார்.

<<<<>>>>

திருவாரூரில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இன்று மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற உள்ளதாக ஆட்சியர் திருமதி சாருஸ்ரீ கூறியுள்ளார்.

<<<<>>>>

'உங்களைத் தேடி உங்கள் ஊரில்' திட்டத்தின் கீழ் மதுரை மேற்கு வட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அரசுத் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சியர் திருமதி சங்கீதா ஆய்வு செய்தார்.

<<<<>>>>

ராமேஸ்வரம் அருள்மிகு ராமநாதசுவாமி திருக்கோயில் உண்டியல் காணிக்கை எண்ணப்பட்டதில் ஒரு கோடியே 15 லட்சம் ரூபாய் கிடைத்துள்ளதாக கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

போதைப்பொருள் ஒழிப்பு தினத்தையொட்டி தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் காவல்துறை சார்பில் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

<<<<>>>>

கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலையைக் காணும் வகையில் அமைக்கப்பட்டு வரும் ஒலி, ஒளிக் காட்சிக் கூடப் பணிகளை மாவட்ட ஆட்சியர் திரு ஸ்ரீதர் ஆய்வு செய்தார்.

<<<<>>>>

திருப்பூரில் மாநகராட்சி சேவைகள் தொடர்பாக புகார்கள் இருந்தால் அதைத் தெரிவிக்க ‘நம்ம திருப்பூர்’ என்ற கைபேசி செயலியை மாநகராட்சி நிர்வாகம் அறிமுகம் செய்துள்ளது.

<<<<>>>>

சென்னை ஆலந்தூர் பகுதியில் நடைபெற்ற வருவாய்த் தீர்வாயத்தில் மாவட்ட ஆட்சியர் திருமதி லட்சுமி சித்தார்த் ஜகடே பங்கேற்று அரசின் நலத்திட்ட உதவிகளைப் பயனாளிகளுக்கு வழங்கினார்.

<<<<>>>>

தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களுக்கு எதிராக சென்னையில் கடந்த 14 நாட்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின்போது 83 பேர் கைது செய்யப்பட்டு 76 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மாநகரக் காவல்துறை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சென்னையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகள் மற்றும் சாலைப் பணிகள் குறித்து மேயர் திருமதி பிரியா தலைமையில் அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்தி*

உலகக் கோப்பை டுவெண்டி டுவண்டி கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது அரையிறுதியில் இந்தியா இன்று இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

கயானாவில் நடைபெறவுள்ள இந்தப் போட்டி இந்திய நேரப்படி இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

<<<<>>>>